# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆனி 1984 ★ இதழ் 102


# மண்ணில் நல்ல வண்ணம்

உலகில் கல்தோன்றிய பின்னரே மண் தோன்றியது. மண் தோன்றுவதன் முன் தோன்றிய மனிதன் தமிழன். தமிழன் கண்ட தலைசிறந்த தொழில் வேளாண்மை. மண் என்றும் மலடாக இருப்பதில்லை. எங்கும் ஏதாவது ஒருவகைப் பயிர் பயன் தருதல் இயற்கை அன்னையின் இன்னருள்.

தமிழன் அன்று தொடக்கம் உழவுத் தொழிலபிவிருத்தியில் மாற்றுப்பயிர் செய்தலைக் கண்டு பயன் பெற்றவன். செந்நெல்லின்பின் சிறுதானியங்கள் செய்து அறுவடை செய்து வீட்டை நிரப்பியவன். வானம் பொழியத் தவறின், வற்றுத குளங்களிலிருந்து நீர்ப்பாய்ச்சி விளைவைக் கண்டவன்.

இன்று வலிகாமப் பிரதேசமெங்கும் வரண்ட வயல்களில் வரண்ட பயிரான எள் வளமாக வளர்ந்து விளைகின்றது. நல்லெண்ணெய் நாகரிகம் நமது நாகரிகம். பிள்ளை பிறந்தவுடனேயே உடம்பெங்கும் பூசி மூக்குவா மூக்கு என்று மூக்கையும் நீளமாக வளரும் வண்ணம் தொட்டிழுப்பது நல்லெண்ணெய். உச்சிமுதல் உள்ளங்கால்வரை நல்லெண்ணெய் பூசித் தேய்த்து முழுகுவதை சனி நீராடு என்று சுருக்கமாகக் கூறுவர்.

எங்கள் பிரதேசத்தில் எள்ளின் விளைவு போதாது. எல்லா வயற்காரரும் இரண்டொரு பாத்திகளிலாவது பருவகாலம் தவறுமல் எள் விதைத்தல் நல்லது. நாட்டில் மூக்குக்கண்ணாடி அதிகரிப்பதற்கு மூலகாரணம் நாம் எள்ளையும் நல்லெண்ணெயையும் குறைத்ததும், கைவிட்டதுமாகும். கிறீம் முதலிய பசைகள் பாணிகளைப் பூசித் தலையையும், கண்ணையும், மூளையையும் கெடுத்துக்கொள்ளாமல், எள்ளை விதைத்து நல்ல பயன் பெறுவோமாக.



அளவெட்டியூரில் ஏழைகள் வாழ அன்னதானம், வஸ்திரதானம், சொர்ணதானம் செய்யும் சின்னப்பு தம்பதிகள்

★ நல்லோர் கூட்டுறவு உற்சாகத்தை உண்டாக்கும் ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்
### திருநாகேச்சரம் – திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

தாயவனை வானோர்க்கும் ஏனோ ருக்குந்
தலையவனை மலையவனை உலக மெல்லாம்
ஆயவனைச் சேயவனை அணியான் தன்னை
அழலவனை நிழலவனை அறிய வொண்ணு
மாயவனை மறையவனை மறையோர் தங்கள்
மந்திரனைத் தந்திரனை வளரா நின்ற
தீயவனைத் திருநாகேச் சுரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேராதாரே.

திருச்சிற்றம்பலம்

சிவனையறியாமல் துன்பத்தில் நீங்குதல் முடியாது என்று சுவேதாசுவதர உபநிடதங் கூறியவாறு பரசிவ ஞுணர்ச்சியின்றிப் பல்லுயிர்த் தொகையுமென்றும் விரவிய துயர்க்கிறெய்தி வீடு பேறடைதல் இயலாது. சிவபெருமான் தாயாய் இருப்பவர், தலைவரானவர், மலையிலுள்ளவர், அடிமை பூணுர்க்குத் தூரத்தவர், அடியவர்களுக்கு ஆகமமாகி அண்ணிப்பவர் – அருகில்வந்து ஆட்கொள்பவர், உலகமெல்லாம் வியாபித்துப் பரத்துவம் உள்ளவர், வெம்மையானவர், தண்மையானவர், மாயம் வல்லவர், வேதம்வல்லவர், வேதப்பொருளாயுள்ளவர், மந்திரவடிவாயுள்ளவர், ஆகமவடிவானவர், ஓங்கி எழுகின்ற வேள்வித்தீயாய் உள்ளவர், அவரே வீடுபேறு தந்தருளுபவர். அவர் திருநாகேச்சரத்தில் எழுந்தருளியுள்ளார்.

## பண்ணுகம் சத்சங்கசாதனை வட்டம்

இவர்கள் இப்பகுதிகளில் நல்லமுறையில் சமயத் தொண்டு பரப்புவதோடு சத்சங்கங்கள் மூலம் தியானமும் பழக்குகிறுர்கள். அமைதி, ஆனந்தம், ஆன்ம ஈடேற்றம் யாவும் தியானத்தில் கனிவதாக.




## நிலையாமை

தோன்றும் பொருள்கள் என்றும் நிலைக்கமாட்டா

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு.

நேற்று எம்மத்தியில் வாழ்ந்தவன் ஒருவன் இன்றைக்கு இல்லை என்று நாம் கண்கூடாகக்கண்டு கூறும் அளவுக்கு நிலையாமையாகிய இழிவை உடையது இவ்வுலகம்.

### Instability of Things

The person who was yesterday among us is not today. This is the pride of the world.

## 1984 யூன் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 3 | ஞாயிறு | — | சேக்கிழார் குருபூசை |
| 4 | திங்கள் | — | இணுவில் கந்தர் கொடி |
| 6 | புதன் | — | பகல் 11–49 அட்டமி |
| 7 | வியாழன் | — | அட்டமி நவமி |
| 8 | வெள்ளி | — | 6–57 வரை நவமி |
| 9 | சனி | — | ஏகாதசி (தொடக்கம்) |
| 11 | திங்கள் | — | பிரதோஷவிரதம் |
| 13 | புதன் | — | பூரணை விரதம் |
| 14 | வியாழன் | — | திருஞானசம்பந்தர் குருபூசை |
| 18 | திங்கள் | — | வண்ணை – வீரமாகாளி கொடி |
| 20 | புதன் | — | பகல் 3–28 அட்டமி |
| 21 | வியாழன் | — | அட்டமி நவமி |
| 22 | வெள்ளி | — | நவமி |
| 23 | சனி | — | காலை 7–14 வரை நவமி |
| 25 | திங்கள் | — | ஏகாதசி விரதம், |
| | | — | நாகதம்பிரான் பொங்கல் |
| 26 | செவ்வாய் | — | பிரதோஷ விரதம்,<br>கார்த்திகை விரதம் |
| 27 | புதன் | — | இணுவில் கந்தர் தேர்<br>பண்டிதமணி பிறந்தநாள் |
| 28 | வியாழன் | — | அமாவாசை |

## கரவெட்டி கிழக்கு இந்து இளைஞர் மன்றம்

மில்க்வைற் தொழிலதிபரின் உபகரிப்பை ஏற்று இந்து இளைஞர் மன்றம் பெருமுயற்சியெடுத்து மொழியையும் சமயத்தையும் வளர்க்கிறுர்கள். வாழ்க! வளர்க!!

★ நூல்கள் செய்வோருக்கு மரணம் இல்லை ★



## பால்குடிபாவா

வடதேசத்திலே காற்றையே உணவாகக்கொண்ட பவஹாரிபாவா இருந்தார். கதிர்காமத்தில் பாலையே உணவாகக்கொண்ட பாவா 1873–ஆம் ஆண்டு முதல் 1898–ஆம் ஆண்டு வரை மங்களபுரி சுவாமிக்குப் பின் பாலசுந்தரியின் மடத்தில் அதிபதியாயிருந்தார். அவரின் திருநாமம் சுவாமி கேசோபூரி. (கேசோபூரி சென்ற மாதச் செய்தியில் அச்சுப்பிழையாக கேசோழரி என வந்தது தப்பு.) அவரைக் கேசவபூரி எனவும் வழங்கினர்.

கேசவபூரி வடதேயத்துப் பிராமணர். ஏழடி உயர மானவர். நிரம்பிய படிப்பாளி, அலகபாத் நகரவாசி. உலகத்தைத்துறந்து, கடுந்தவஞ்செய்து, இலங்கைக்கு வந்து, கதிர்காமத்தைக் கண்டார். மாணிக்ககங்கையும் முருகனின் திருவருட் பாய்ச்சலும் அவரை இங்கே தங்க வைத்தன.

வடநாட்டின் சுருச்பூரிச்சுவாமி என்பார் இராமேசுவரத்தில் தங்கியிருந்த வேளையில், கதிர்காமத்தையன் அவரை இங்கழைத்துக் கேசவபூரிச்சாமிக்குப் பணிவிடை புரிய வைத்தார்.

**அடுத்த மாதம் முத்துலிங்கசுவாமி**

## சுற்றுடற் பிராணிகள்

எங்கள் சுற்றுடலில் உள்ள பிராணிகள் பல எங்களுக்கு நன்மை செய்வனவாயும், தீமைபயப்பனவாயும் உள்ளன. பொதுவாக எல்லாப் பிராணிகளும் நமக்கு வாய்திறந்து பேசாமல் நல்ல பாடம் கற்பிக்கின்றன.

எறும்பைப்போல, தேனீபோல பாடம் சொல்லுவோர் இல்லை. கிரேக்க வீரர் எறும்பிடம் படித்த பாடம் அதிகம். கிரேக்க தத்துவ மேதைகள் தேனீயை நன்கு கவனித்தனர். அரசர்கள், தளபதிகள் சிலந்திப் பூச்சியிடம் பாடம் படித்தனர். மகா அலெக்சாண்டர் எறும்பிடம் படித்த பாடம் பெரிது.

சின்னஞ்சிறு பறவைகள் கூடுகட்டுவதைப் பார்த்த பின்னரே மனிதன் வீடு கட்டினன். பெரிய விஞ்ஞானி வானில் பறக்க யத்தனித்ததும் பறவையைப்போல மேலே போக விரும்பியதாலேதான். பெரிய எஞ்சினிய நிபுணரை வென்ற பிராணிகள் நிலத்திலும் நீரிலும் வாழ்கின்றன.

# Give one word for:

1. To grow less
2. Single in number
3. To wash clothing
4. Mess used for catching fish
5. Machine that flies
6. School examination
7. To flow back to the sea
8. Another word for taxi
9. Slow-moving animal
10. To take into custody
11. Where ships dock
12. Prepare manuscript for publishing
13. Not often found
14. A great deal
15. Cutting side of a knife
16. To fly high
17. Of the month
18. Soft sticky earth

1. Wane 2. One 3. Launder 4. Net
5. Plane 6. Test 7. Eb 8. Cab 9. Snail
10. Arrest 11. Ports 12. Edit 13. Rare
14. Lot 15. Edge 16. Soar 17. Oral 18. Clay

## பர்ட்டிலே கேள்வி

1. விலங்கில் ஒ்ன்று மட்டுந்தான்
   விந்தையாக முதுகுபட
   நிலத்தில் உறங்கும் அதன் பெயரை
   நீதான் அறிந்தால் கூறிடுவாய்.

2. முட்டை நின்று வெளி வந்த
   முதலே பறவை ஒன்றுக்குத்
   தட்டில்லாமல் பறக்கு மாற்றல்
   சகத்தில் உண்டு பறவையாதோ.

3. எந்த வகையாம் கடிகாரம்
   இரண்டு முறைதான் நாளொன்றில்
   விந்தையாகக் காலத்தை
   விளக்கிச் சரியாய்க் காட்டுஞ் சொல்.

4. பற்கள் மிகவும் அதிகமாய்ப்
   படைத்த உயிரின் பெயர் சொல்லிப்
   பற்கள் அதற் கெத்தனை யென்று
   பகர முடிந்தால் உடனே சொல்.

1. மனிதன். 2. ஒஸ்ரேலியன் புஸ் ரேக்கி.
3. ஓடாமல் நிற்கும் பழுதான கடிகாரம்.
4. தோட்டத்து நத்தை: 14175 பற்கள்

★ கல்வி ஒன்றுதான் கொடுக்கக் கொடுக்க அதிகரிப்பது ★

## சுந்தரத் தெலுங்கு

தமிழ் நாட்டில் தோன்றிய திராவிட மொழிகளுள் தெலுங்கும் ஒன்று. அது தமிழோடு நெருங்கிய தொடர்புடையது. தமிழிலிருந்து பிறந்தது, பிரிந்தது. ஏராளமான தமிழ்ச் சொற்கள் தெலுங்கை வளம்படுத்தியுள்ளன. நாட்டார் மொழிகளான பழமொழிகளே உருக்குலையாமல் தெலுங்கர் வாயில் நுழைந்துள்ளன.

மொழியமைப்பைவிட கலை, பண்பாடு, நாகரிகம், வாழ்க்கைப் போக்கு முதலியன பலவும் நம்மையொத்துள்ளன. ஒரு காலத்தில் தமிழகத்திலிருந்து தெலுங்கர் பலர் குடும்பங்களாக வந்து யாழ்ப்பாண நகரில் குடியேறி நெசவுத் தொழிலில் நமக்கு வழிகாட்டியாயும் இருந்தார்கள். நாளடைவில் அவர்கள் நம்மோடு கலந்து நல்ல தமிழ் பேசி வந்தார்கள்.

நாங்கள் பழமொழிகள் என வழங்கும் இலக்கியத்தைத் தெலுங்கர் நாநுடி எனப் போற்றுவர்.


1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்–
மனசுலோ மாட மொகமே தெலுபுதுந்தி.
2. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வாராது–
மிஞ்சி போயின கார்யாகினி சிந்திஞ்சி பலமேயி.
3. அத்தி பூத்தாற்போல–
அத்தி பூசி நட்லு.
4. அவனன்றி ஓரணுவும் அசையாது–
கிவுடாக்ஞ லேநிதே சீமைனு குட்டது.
5. அழுதபிள்ளை பால் குடிக்கும்–
ஏட்சின பிட்டகு பாலு.
6. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு–
அதிக மயிதே அம்ருதமு விஷமு.
7. அற்பனுக்குப் பணம் கிடைத்தால், அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்–
அல்புனகு ஐஸ்வரியம் ஒஸ்தே அர்த்த ராத்திரிவேள கொடுகு தெம் மண்ணாடட.
8. அன்னமிட்ட வீட்டில் கன்ன மிடுவதா?–
அன்னமு பெட்டின வாரில்லு கன்னமு பெட்ட வச்சுனா?
9. ஆசைக்கு ஓர் அளவில்லை–
ஆஸகு அந்தமு லேது.
10. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மா இரா–
ஆடேகாலு பாடேநோரு உரகுண்டவு.
11. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு–
ஆதுர காணிகி தெலிமட்டு.
12. ஆபத்துக்குப் பாவம் இல்லை–
ஆபதகு பாபமு லேது.
13. ஆறில்லா ஊருக்கு அழகில்லை–
நீருலேனி ஊரு, நாரி லேனி இல்லு.
14. இஞ்சி தின்ற குரங்குபோல–
அல்லமு தின்ன கோதி வலெ.
15. இந்தப் பூனை இந்தப் பாலைக் குடிக்குமா?–
ஈபில்லி ஆபாலு தாகுனா?
16. இரண்டு கையும் தட்டினால்தான் ஓசை வரும்–
ரெண்டு சேதுலு தட்டிதேனே சப்புடு.
17. இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?–
ராமுடு ராஜ்யம் சேஸ்தே நேமி, ராவணுடு சேஸ்தே நேமி?
18. இருந்தல்லவோ படுக்க வேண்டும்–
கூர்கண்டி படுகோவலெனு.
19. இரும்பு அடிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை?–
இனுமு கரிகே சோட ஈகலகே முன்னதி,
20. இறங்கு பொழுதில் மருந்து குடி–
ஔஷதானகு சாயந்நரம் மஞ்சிதி.
21. ஈன்ற புலிபோல?–
ஈனின புலிபோலெ.
22. உடல் இரண்டு உயிர் ஒன்று?–
ஒடள்ளு ரெண்டு உசுரு ஒகடி.
23. உடும்புக்கு இரண்டு நாக்கு
உடுமுகு ரெண்டு நாலிகலு.
24. உண்ட சோற்றுக்கு இரண்டகம் செய்யலாமா?–
உண்டே சோடுறு ரெண்டு சேயுடா?
25. உதட்டில் வெல்லம் உள்ளத்தில் நஞ்சம்–
அங்கிட பெல்லமு ஆத்மலோ விஷமு.
26. உள்ளங்கையில் நெல்லிக்காய்
அர சேதி லோனி உசிரிகாய.
27. ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே
ஊரபிலிசினா பேரவிலவராது.
28. எருதுநோய் காக்கைக்குத் தெரியுமா?
எத்துபுண்டு காகிகி முத்தா?
29. ஐந்து விரலும் ஒன்று போலிருக்குமா?
அய்து விரேள்ளு ஸமானமுகா வுண்டவா?
30. ஒணானுக்கு வேலி சாட்சி, வேலிக்கு ஒணான் சாட்சி–
தொண்டகு வெலுகு ஸாட்சி, வெலுகுகு தொண்ட ஸாட்சி.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்



அறுபத்துமூன்று நாயன்மார் திறம்கூறும் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணமாகிய மாக்கதையில் அரைப்பங்கு விரிந்த அளவுக்கு அவர்தம் வரலாறு அதுவும் பதினறுவயது வாழ்ந்த வாழ்க்கை கூறப்பெறுவதானல் அதிலேயொரு தனிப்பெருமையுண்டு. திருவருள் வசத்தால் மூன்றும் வயதிலேயே தேவாரம் பாடியருளிய குழந்தை இசைத் தமிழுக்கும் புத்துயிரளித்தது. தமிழ் வளர்த்தது. சைவத்தை உயர்த்தி உரிய இடத்தில் வைத்தது. அடியார்கள் மத்தியில் வாழ்ந்து, அவர்களோடு திருக்கோயில்கள் தோறும் சென்று ''இங்கே சிவபெருமான் எழுந்தருளியுள்ளார்'' என்று எல்லோருக்கும் காட்டியருளினர். ஊத்தையராய் வாழ்ந்தவர் பலரைப் புனிதர்களாக்கி உய்யும் நெறி காட்டியருளினர்.

★ தத்துவம் தெரிந்தவனை செல்வத்தால் அடக்கமுடியாது ★



# முத்திரையில் உலாவரும் மற்றொரு வித்தகர்

இலங்கைத் தமிழரிடையே அவ்வப்போது ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர் என்று வியந்து பாராட்டக்கூடிய அளவுக்கு வித்தகராயும் தேசிய வீரராயும் சேவை செய்து தொண்டுள்ளம் கொண்டு வாழ்ந்தவர்கள் பலர்.

ஆறுமுகநாவலர், சேர். இராமநாதன், சேர். அருணாசலம், கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி, தாமோதரம் பிள்ளை, கதிரைவேற்பிள்ளைகள், செந்திநாதையர், விபுலானந்தர் முதலானோரின் தொண்டுகள் அளவிட முடியாதவை.

இந்தவகையில் நீதிபதி வைமன் கதிரைவேற்பிள்ளை அவர்களின் பெருஞ் சேவையொருபுறமாக, அவர் தந்த அருமை மைந்தன் பாலசிங்கம் அவர்களின் பன்முகஞானமும் பரந்தசேவையும் பண்பாட்டுக்கு அவர் உபகரித்தமையும், ஆக்கபூர்வமாக அவர் செய்த பணிகளும் பக்கக் கணக்காக எழுதவேண்டியவையாகும்.

அரசியற்றுறை, சட்டத்துறை, விவசாயத்துறை, பொருளாதாரத்துறை, சித்த ஆயுர்வேத மருத்துவத்துறை, நீர்ப்பாசனத்துறை, மீன்பிடித்துறை, கைத்தொழில்த்துறை, பொறியியல்துறை என்றெல்லாம் இன்னும் பலவாக அடுக்கிக்கொண்டு போகக்கூடிய வளம், வருவாய்த் திட்டங்களையெல்லாம் வகுத்து தேசாதிபதிகள், சேர். இராமநாதன், சேர். அருணாசலம் முதலான பெரியவர்களைக் காரிய நிர்வாக சபைகளில் சேர்த்து ஆராய்ந்த இளம்பெரும் தலைவர் அவர்.

## குலமுறைச் சிறப்பு

ஒல்லாந்த தேசாதிபதிகள் காலத்தில் வன்னியர் சிலர் அத்துமீறிச் செய்த கலகத்தைத் தைரியமாக முன்னின்று அடக்கி வீரவாள் பரிசுபெற்ற சந்திரசேகரர், வீரத்தோடு தமிழ்பாவியற்றும் புலவருமாயிருந்து நையாண்டிப் பாடல்கள் பாடியவண்ணம் 96 வருடம் வாழ்ந்தவர். அவரின் இளையமைந்தன் குமாரசுவாமி புரந்தர நாடகம் பாடிய பெரிய புலவன்.

## குமாரசுவாமிப் பெரியார்

சந்திரசேகரரின் புதல்வி வள்ளியம்மை கதிர்காமபூபதி என்பாரை மணந்து 11-8-1791-ஆம் நாளில் பெற்ற மைந்தனும் ஒரு குமாரசுவாமி. இந்தக் குமாரசுவாமிக்குத் தொழில் பாட்டுப்பாடுதல். எடுத்ததற்கெல்லாம் பாட்டு, எல்லா ஊர்களுக்கும் பாட்டு. எல்லாக் கோயில்களுக்கும் ஊஞ்சல் பாட்டு. அவரின் பெயர் குடாநாட்டுக்கும் அப்பால் பரவி நிலவியது. அக்காலப் புலவர் வரிசையில் முதலிடம்பெற்றவர் அவர்.

காங்கேயன்துறையில் பெருமளவில் வர்த்தகஞ்செய்த குலோத்துங்க முதலாளி குதிரையேறி மாவிட்டபுரத்தை வணங்கச் செல்லும் காட்சி புலவர் மனத்தை உருக்கவே, அவரைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு கிளிவிடு தூது பாடிப் பெரும் சிறப்புப்பெற்றதைத் தொடர்ந்து, தமது நண்பன் உடுப்பிட்டி அருளம்பலப்பிரபுமீது அருளம்பலக்கோவை பாடிப்பலரைத் திகைக்கவைத்தவர். பெரும் புலவராய அவர் புரவலராக இருந்தமையால், எவரிடமும் எதனையும் கைநீட்டிப் பெறாது, அந்நாளில் கல்வித் தொண்டு புரிந்த அமெரிக்க மிசனரிமாருக்குப் பெரு நிலப்பரப்பை ஊரிக்காட்டில் அன்பளிப்பாக எழுதிக் கொடுத்தவர்.

## கதிரைவேற்பிள்ளை

குமாரசுவாமிப் பெரியார் அந்நாளில் புகழ்பூத்து விளங்கிய புண்ணிய மணியகாரனின் புதல்வி சிவகாமி என்பாளை மணந்து சபாபதி, கதிரைவேலு என்னும் மைந்தர் இருவரைப் பெற்றார். கதிரைவேற்பிள்ளை 1829ம் ஆண்டில் தோன்றி, இளமையில் வல்வெட்டியில் வாழ்ந்த புலவர்களிடம் படித்து விவேகியாய் வளர்ந்து, வட்டுக் கோட்டைச் செமினரியில் படிக்கச்சென்று, தந்தையார் சுத்த சைவமாதலால் தனிவீடமைத்துச் சமையற்காரனை நியமித்துக்கொடுக்க நல்ல சூழலில் நன்றாகப்படித்தார். விவேகியும் நல்லவருமான மாணாக்கனை அதிபர் ஹொசிங்ரன் செமினரிக்கு வருகைபுரிந்த தேசாதிபதி தொறிங்ரனுக்கு நேரிலறிமுகஞ் செய்துவைத்தார். அதிபர் ஹொசிங்ரன் நாளடைவில் தமிழ் படித்து சைவசமய சாத்திரங்களில் வெகுவாக ஈடுபட்டு சிவஞானபோதம், சிவப்பிரகாசம், தத்துவக்கட்டளை என்பனவற்றை ஆங்கிலத்தில் அருமையாக எழுதி 1854ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

## பன்முகஞானம் பெற்ற வைமன்

கதிரைவேற்பிள்ளையின் விவேகம் உச்சக்கட்டமாயிருந்தது. கணிதம், விஞ்ஞானம், கலைத்துறைகள் என்பனவோடு; மொழித்துறையில் சமஸ்கிருதம், லத்தீன், கிரீக், இபுறு நன்குவந்தன. வானசாத்திரத் துறையில் வெகுவாக ஈடுபாடுகொண்ட கதிரைவேற்பிள்ளை மேலும் பெரிய படிப்புப்பெறுவதற்கு அக்காலத்து வழக்கப்படி பேராசிரியர் ஒருவரின் பெயரையும் இணைக்கவேண்டிய சூழ்நிலையில், வைமன் என்பாரின் பெயரை இணைத்து

★ பொறுமை உள்ளவனுக்குப் பாதுகாப்பு தேவையில்லை ★

வைமன் கதிரைவேற்பிள்ளை ஆனார். அவர் பெயரால் நல்லூரில் வைமன் வீதி வழங்குகிறது.

## ஆசிரியர் வேலையோடு பத்திராதிபர்

பெரும் படிப்பாளியாகிய கதிரைவேற்பிள்ளை செமினரியிலேயே ஆசிரியராக இருந்து விலகி, யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியை அலங்கரித்தார். மத்தியகல்லூரியில் தாமோதரம்பிள்ளை, செல்லப்பாபிள்ளை, கிறேனியர், கபிரியல், றெக்வுட் முதலானவர்களை உருவாக்கிய பெருமை அவருக்குண்டு.

சைவத் தமிழ்ப்பண்பாட்டைப் பிரதிபலிக்கும் இலக்கியக் கண்ணுடி, Litterary Mirror என்னும் பத்திரிகையை 6-5-1853 முதல் நடத்திவந்தார். சைவத்தோடு வர்த்தகம், கலை, விஞ்ஞானம், கலாசாரம் முதலியனவும் கண்ணுடியில் ஒளிவீசின.

## சட்டத்துறையில் ஈடுபாடு

கதிரைவேற்பிள்ளை சட்டத்துறையை நன்கு கற்றுத் திறமையுற்றிருந்ததை அக்காலத்து பெரிய நீதிமன்றத்து நீதிபதி அறிந்து, இவரை பிளீடர் என்னும் மன்ருடியாக நியமித்தார். இந்த நியமனத்தால் மத்திய கல்லூரியை விட்டு விலகியபோது, வெஸ்லியன் மிசன் தலைவர் பிரியாவிடை நல்கினுர்.

கதிரைவேற்பிள்ளையவர்களைப் போல வடமாநிலத்தில் வேறெரு பிரபுவைக் காணமுடியாது. இவருடைய கல்வியின் ஆழம் அதிகம். வயதில் இளைஞராயிருந்தும் முதிர்ந்த அநுபவம் வாய்ந்த அறிஞர் இவர். இவர் ஒரு பூரண மனிதர். (A perfect gentleman)

## யாழ்ப்பாணத்தவருள் முதற்பெரிய அப்புக்காத்து

மன்ருடியாயிருந்த கதிரைவேற்பிள்ளை தமது தரத்தை உயர்த்திக்கொள்ள விரும்பிக் கொழும்புக்குச் சென்று பெரும் புகழ்பெற்ற வெள்ளைக்காரனுய றஸ்ற் என்பாரிடம் 100 பவுண் கொடுத்து சட்ட மேற்படிப்புப் படித்தார். இவரின் ஆற்றலையும் ஆர்வத்தையும் கண்ட றஸ்ற் 50 பவுணைத் திருப்பிக்கொடுத்ததோடு, பரீட்சை எடுப்பதற்கு அநுமதியுங் கொடுத்தார். பரீட்சையின் பெறுபேறுகளை மதித்த றிச்சாட் மோகன், லோறன்ஸ் முதலானேர் இவரின் திறமையை வெகுவாக மெச்சினர். இந்த றிச்சாட் மோகன் என்னும் பறங்கியரே சேர். இராமநாதனையும் உருவாக்கியவர். சேர். இராமநாதன் தமது படிப்பகத்தில் அவரின் பெரிய படத்தை வைத்து மரியாதை செய்துவந்ததை நாம் நேரிலறிவோம்.

யாழ்ப்பாணத்தவருள் முதல் அப்புகாத்தாக 5-5-1858 இல் கதிரைவேற்பிள்ளை பிறந்தமண்ணிற் கால் வைத்தார். முன்னரே சட்டத்துறையிற் சிங்கங்களான மறே, முத்துக்கிருஷ்ணு, டெனிஸ்பார்சல் முதலானேரும், பின்வந்தவர்களான கூல்ட், நெல் முதலானேரும் வியப்பெய்த, வழக்காடுவோர் மனம்மகிழக் கதிரைவேற்பிள்ளை தொழில் புரிந்தார். பிறவுண் சின்னத்தம்பி என்பார் பெரிய புறெக்ரராய் முடிக்குரியவராயிருந்தார்.

## நீதிபதியானமை

கதிரைவேற்பிள்ளை 1858 முதல் 1872 வரை அப்புக்காத்தாயிருந்தார். தேசாதிபதி கிரகரி 27-5-1872 இல் யாழ்ப்பாணம் வந்தபோது இவரை நேரில்கண்டு பாராட்டி நீதிபதியாக நியமனஞ்செய்தார். ஊர்காவற்றுறையில் பொலிஸ் நீதிபதியாகப் பொறுப்பேற்று நேர்மையாகக் கடமையாற்றியதைக் கேட்டறிந்த தேசாதிபதி ஆதர் கோடன் லண்டன் மந்திரியாருக்குத் தகவுரை எழுதி, இவரை சிவில் சேவையில் உறுப்பினராக உயர்த்தினுர்.

## பன்முகப்பணிகளும் பரிசும்

மாவட்ட நீதிபதி கோணலி என்பாரின் வேண்டுகோளுக்கு அமையக் கதிரைவேற்பிள்ளை 1892ஆம் ஆண்டளவில் தேசவழமை, மலையாள மரபுகள், திருமணத் தொடர்புரிமைகள் முதலியன சம்பந்தமான ஒழுங்குகளை எழுதியுதவினுர். யாழ்ப்பாணப் புலவர்களின் படைப்புக்கள் ஏட்டுருவில் பறணகளில் கிடந்தனவற்றைச் சேகரித்து லண்டனில் நடைபெற்ற கண்காட்சிக்கு அனுப்பினுர். இதனருமையையுணர்ந்த குடியேற்றநாட்டு மந்திரியார், இவருக்குப் பாராட்டும் பதக்கமும் அனுப்பினுர். இவரின் பெருமைகளைத் தாய் தந்தையர் நீண்டகாலம் வாழ்ந்து கண்டு மகிழ்ந்தனர். ஆறுமுகநாவலரவர்கள் இவரின் பெருமையை வியந்து எழுதியுள்ளார். தமிழ்ப் புலவர்களுக்குக் கதிரைவேற்பிள்ளை நன்ருக உதவினுர் மதுரைத் தமிழ்ப்பேரகராதியைத் தயாரித்துப் பெருமை பெற்ருர்.

## மண வாழ்வும் மக்கட் செல்வமும்

கதிரைவேற்பிள்ளை முதலில் 1862 இல் உடுப்பிட்டி முருகேசர் மகளை மணந்து பிள்ளைகள் நால்வரைப் பெற்ருர். மைந்தனுகிய குமாரசுவாமி உச்சவிவேகியாய்ப் பெரும் படிப்புக்கு வயது குறைவாயிருந்தார். பின் லண்டனுக்குச் செல்வதற்கு ஆயத்தமாயபோது, முள் குத்தியதால் உண்டான ஏற்புவலிக்கு ஆளானுர். கதிரைவேற்பிள்ளையின் மனைவியும் காலமாகவே. இவர் கோப்பாய் கதிரேசு என்பாரின் புதல்வி, சிவஞானப்பிள்ளையை 1874இல் மணந்தார். இவருக்கு மைந்தர் ஒருவரும் புதல்வியர் இருவரும் பிறந்தனர்.

## பாலசிங்கம் தோன்றினுர்

கதிரைவேற்பிள்ளையின் ஒரு மைந்தனுக 23-6-1878ல் தோன்றியவரே பாலசிங்கம். இளமையில் வட்டுக்கோட்டையில் கல்விகற்றபின், கொழும்புக்குச் சென்று இராசாங்கக் கல்லூரியில் மேற்படிப்புக் கற்ருர். சட்டத்துறையை விரும்பி, மேல்நாடுகளையும் சுற்றிப் பார்த்து நிரம்பிய அறிவும் அநுபவமும் பெற்று மீண்டு, தொழில் நடத்திப் பலமுறை நீதிபதியாகப் பதிற் கடமையும் பார்த்தார்.

## அரசியல்

சேர். இராமநாதன் 1910ஆம் ஆண்டில் சட்டசபையில் முழு இலங்கைக்கும் தெரியப் பெற்ற பிரதிநிதியானதும், 1914இல் பாலசிங்கம் தமிழரின் நியமன அங்கத்

★ விநயமுள்ளவனுக்கு ஆபரணம் தேவையில்லை ★

தவராஞர். அன்று தொடக்கம் தேசாதிபதிகளின் கவனத்தை நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்களில் ஈடுபடுத்தி வந்தமை எழுத இடம் போதாது. இவ்வாருக 1924ஆம் ஆண்டில் உண்டான மனிவ்திருத்தத்தின் பயஞக வடமாகாணத்தில் மக்களால் தெரியப் பெற்ற ஐவருள் கிழக்குப் பகுதிப் பிரதிநிதியாகத் தெரியப் பெற்ருர்.

அக்காலத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் எண்மர் தலைப் பாகை உத்தரியத்தோடு தலைநிமிர்த்தி அரசகாரியம் பார்த்தனர். பாலசிங்கம் சட்டசபையில் இருந்தவாறே, நிறைவேற்றுச் சபை என்னும் எக்சிகியூட்டிவ் கவுன்சிலி லும் இடம் பெற்றுத் தேசாதிபதிகளுக்கு மந்திரிகளில் ஒருவராயும் இருந்தார். இவ்விதமாக இரு சபைகளிலும் இடம் வகித்த ஒரேஒரு இலங்கையர் இவரேதான்.

## பாலசிங்கத்தின் பன்முகப் பணிகள்

கௌரவ பாலசிங்கம் அவர்கள் தமது பன்முக ஞானத் தைக் கொண்டும், பரந்த அநுபவத்தைக் கொண்டும் பன்முகப் பணிகள் புரிவதற்குத் தேசாதிபதிகளின் கவனத் தைத் திருப்பினர். சட்டசபையில் பதினேழாண்டுக் காலம் பலவிடயங்களை எடுத்துக்காட்டினர். ஐரோப்பிய நாடுகளில் தாம் கண்ட முன்னேற்றப் பாதைகளை விளக் கினர். தேசாதிபதிகள் கருத்தூன்றிக் கேட்டுத் தலை யசைத்தார்கள்.

பாலசிங்கத்தை மாவலி நாயகன் என்று பாராட்ட வேண்டும். கங்கையைக் கொண்டுவந்த பகிரதனைப் பற் றிப் புராணங்கள் கூறுகின்றன. மாவலியை வடக்கே திருப்ப வழிகாட்டியவர் பாலசிங்கம். ஒவ்வொரு திருப்பு முனைகளிலும் அவரின் சிலைகள் அமைதல் வேண்டும். பெரிய நீர்த்தேக்கம் அவரின் பெயர்தாங்கிப் பாலசிங்க சமுத்திரம் எனப் பெயர் பெறுதல் வேண்டும். ஆயுர் வேதத்துக்கு புனர் வாழ்வளித்த அவர் பெயர் பல்கலைக் கழக விரிவுரை மண்டபத்துக்குச் சூட்டப் பெற வேண் டும்.

பிறநாட்டவர் சிலர் தென்னிலங்கையில் வீடுகள் வளவுகள் விளைநிலங்களை ஈடுபிடித்து அறுதியாக்கி விற்று வந்த அடாத செயலைக் கண்டு பதைபதைத்து அரச ஈட்டு வங்கி என்னும் State Mortgage Bank கண்டு அதன் இயக்குநராயும் இருந்த பெருமைதான் என்னே. மக்கள் வங்கிக்கு வழிகண்ட உத்தமர் பாலசிங்கமன்றோ?

மாவலிகங்கை ஆனையிறவு வரை பாய்வதற்கு வழி வகுத்த பாலசிங்கம், மட்டக்களப்பு, புத்தளம், யாழ்ப் பாணம் கடலேரிகளின் பரப்பையும், அவற்றை நன்னீர்த் தேக்கங்களாக்கும் சாதனையையும், அவை நீர் பாய்ச்சக் கூடிய பரப்பையும் விளக்கினர். முழு இலங்கையின் நீர்ப்பாசன ஆய்வு நடத்த 1926இல் குழு அமைத்தார். பட்டிப்பளை ஆற்றை அவர் தொட்டுக்காட்டியதால் அதை கல்லோயா எனத் தென்னிலங்கைச் சகோதரர் வாய்ப் பாக்கினர். தாம் ஒல்லாந்தில் கண்டு வந்த காற்ருடி முறையில் Lift Irrigation "நீர்ப்பாசனத்தை விளக்கினர். வடமாநிலத்துக்கு வாய்ப்பாக ஒரு துறைமுகத்தைத் திறவுங்கள், தடுப்பு முகாம் இன்னவாறமைக்கலாம் என்று தமிழ் நாட்டுக்குக் குறுக்குப்பாதை அமைக்க வழி காட்டினர். அதனல் 250 மைல் நீளம் போகவேண்டிய தில்லை என்று சுற்றி வளைந்த பாதையைக் கிண்டல் செய்தார்.

## சட்டசபைக்கு வெளியே

தமிழன் என்ருெரு இனம் பழைய பண்பாடு, ஆரியர், யாவர், கைத்தொழில் முன்னேற்றம், உணவுப் பஞ்சம், வரிப் பழுவைக் குறைக்கும் வழி, பண்டைய நாகரிகம், பழைய மருத்துவ முறை, வட்டிக்குப் பணங் கொடுப் போர், சட்டச் சீர்திருத்தம், இலங்கைச் சட்டங்களின் திரட்டு, பாலசிங்க நிறுவன வெளியீடுகள் என்பன பல விரிவுரைகளாகவும், விரிந்த நூல்களாகவும் வெளி வந்தன. இவ்வாருகப் பரந்த அளவில் பன்முகப் பணி கள் செய்த பாலசிங்கம் 74 வயது வரை நீண்ட காலம் வாழ்ந்து தம் பணிகளின் பயன்களைக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்தார்.

இந்துபோட் இராசரத்தினமும் தமையன் கதிரேசுப் பிறக்ரரும் பெரியவர்கள். இவர் பாலசிங்கத்தின் தாய் மாமன் சுப்பிரமணியத்தின் மக்கள். வயதில் மூத்த பால சிங்கம் மைத்துனர்களாய வித்தகர்களுக்குத் தேசியம் போதித்தவர். தேசியம் வழி நின்று பிற்காலத் தேர்தல் களில் தோல்வியதழுவிய வீரர் பாலசிங்கம். அவர் 1934இல் அரசாங்க சபைக்குச் சென்றிருந்தால் நிலைமை வேரு யமைந்திருக்கும். வாழ்க பாலசிங்கத்தின் திருநாமம். அவர் முயற்சியுள்ள தம் மைந்தனுக்கும் பழைய குமார சுவாமி என்னும் பெயரையே இட்டுள்ளார். இவர் பணி வளர்வதாக.

# அருள் விருந்து

**(ஆதாரம் – தர்மசக்கரம்)**

1. நாடுபவர்க்கெல்லாம் நல்லொழுக்கம் சொந்தம்
2. உயிர்களை மதிப்பது பணிவின் பயன்
3. மந்திரம் அறிந்த மனம் வலிமை அடைகிறது
4. பள்ளத்தை நாடும் நீர், உள்ளத்தை நாடும் அன்பு
5. தன் குற்றத்தை அறிந்தவன் பிறர் குற்றம் ஆராய மாட்டான்.
6. பூமியின் பொறுமை மனிதனிடமும் வேண்டும்
7. தனக்குத்தானே நிறைந்த செல்வம்
8. திருப்தி என்பது பண்பாட்டின் விளைவு
9. இன்றைய கடமையை இன்றே செய்தல் தருமம்
10. கஷ்டங்கள் வாழ்வைப் பண்படுத்துகின்றன
11. நமது கடமை தேவ ஆராதனையாகும்
12. பேச்சைவிடப் பணிவிடையே சிறந்தது
13. அருள் தாகத்தால் ஆத்மசாதனம் வலுக்கிறது
14. சமயநெறி பிடித்தவரோடு சம்வாதமாகாது
15. நல்வாழ்வில் நம்பிக்கை இருத்தல் அவசியம்
16. படிப்பு மாத்திரம் போதாது சிந்தனையும் அவசியம்
17. பணிவிடையால் எதனையும் சாதிக்கலாம்
18. வாழ்வு ஒரு மலை. அதன்மீது ஏறிப்போதல் நியதி
19. சீலம் என்பது உறுதியான கற்பாறை
20. தற்பெருமை விரைவில் நாசகாரியாகிவிடும்

★ ஒழுக்கம் என்பது மலைமேலிட்ட ஒளிபோன்றது ★



## விவேகாநந்த வெள்ளம்

நான் என்னும் அகங்காரம் என்னையே ஏமாற்றி விடும். தன்னை வென்றவன் உலகத்தை வெல்லுவான். நம்மைச் சிறைப்படுத்தும் பெருஞ்சுவர் அகங்காரம். காமம், காசு ஆசை, புகழ் என்பன நீங்கவேண்டியவை. மௌனம் சாதிப்பவர்களிடம் ஆத்மசாந்தியுண்டு. நம்மை இறைவனின் கருவியெனக் கருதல் பெரும்பேறு. விருப்பு, வெறுப்பு, வேற்றுமை அகற்றப்பட வேண்டும். பரம் பொருளை அடைவதே பெரிய குறிக்கோள். பஞ்சபாண்டவர்கள் அறத்தின் பிரதிநிதிகள். பிறர்க்குத் துன்பந்தருவது உனது சுதந்திரமல்ல. மிகைபட மகிழ்பவன் மிகைபடத் துன்புறுவான். தீய எண்ணங்கள் நோய்க்கிருமிகளிற் கொடியவை. எல்லாவற்றுக்கும் ஞானமே மூலஸ்தானம். நாம் கெட்டாலன்றி உலகம் கெடமாட்டாது. எண்ணங்களின் மூலதத்துவமே தெய்வம். அன்பு எதையும் சிறுமைப் படுத்துவதில்லை. சமயங்கள் யாவும் சன்மார்க்கங்கள் தர்மம் காலத்துக்கேற்ற யுகதர்மமாகிறது. தபஸ் என்றால் தகித்தல் என்று பொருள் தரும் தவத்தினால் உயர்ந்த சக்தி உருவாகின்றது. தவம் என்பது மானசீகமான ஒரு வலிமை. அகத்தில் இல்லாதது புறத்தில் எங்குமேயில்லை. நல்லறிவு ஓங்கினால் போராட்டம் குறையும். அநுபூதிமான்கள் கூறுவன ஆப்தவாக்கியம். பேரறிவைப் பெறுவதற்குரிய இடம் உள்ளம்.

## பிறநாட்டவர் இப்படியுஞ் சொன்னார்கள்

1. மனவருத்தத்துக்கு இனிய சொற்களே மருந்து
2. தூரத்தில் நின்று கோழையும் வீரம் பேசலாம்
3. உதாரணங்கள் காட்டுதல் சிறந்த பாடம்
4. எல்லோரும் உள்ளத்தில் புலவர்கள்
5. வீடுகள் வாழ்வதற்கன்றி அழகுபார்ப்பதற்கு அல்ல
6. அளவறிந்து பேசுதல் அதிகம் பேசுதலில் நன்று
7. பழைய விறகு எரியும், பழைய நண்பர் நம்பிக்கையானவர்.
8. நூலகங்கள் உண்டாக்கப்படுவதில்லை. அவை வளர்வன.
9. மொழிபெயர்ப்பு என்பது ஒருவகை எதிரொலி
10. பிச்சைக்காரர் சுண்டிப்பார்த்து வாங்க முடியாது
11. சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் இடையில் நமது பூமி.
12. தன் நாட்டை நேசிக்காதவன் எதனையும் நேசிக்க மாட்டான்.
13. கெட்டிக்காரர் நல்லவர்கள் ஆனால் உச்சமானவரல்லர்
14. இயேசு இன்று வந்தால் சிலுவையில் அறைய மாட்டார்கள்.
15. அறிஞர் மடையரிடம் படிக்கும் அளவில் மடையர் அறிஞரிடம் பயில்வதில்லை.

## அறிந்து கொள்ளுங்கள்

1. நாஸ்திகர் என்னும் சைதன்யரின் மதத்தின் பெயர்
2. ஆனிமாதப் பூரணைநாள் விரதத்தின் பெயர்
3. வைராக்கிய சதகத்துக்கு உரை செய்தவர்
4. பாணினியின் வியாக்கியானத்துக்கு வியாக்கியானம்
5. மறைஞானசம்பந்தர் செய்த சிவஞானப் பெருநூல்
6. சுபகருமம், அசுபகருமம் கூறும் நூல்
7. செயிற்றியனர் செய்த நாடகத் தமிழ்நூல்
8. தொல்காப்பியம் சொல்லதிகாரத்துக்கு உரை எழுதியவர்.
9. விஷ்ணுபக்தியில் வருணங்களைத் துறந்தவர்
10. அக்கினி காரியமான ஏழுவகை யாகங்கள்
11. சிவன், உமை, கந்தன் தழுவிய வடிவம்
12. வசிஷ்டமுனிவர் வடமொழியிற் செய்த ஞானநூல்
13. தர்க்க முறையாகச் சைவம் தாபிக்க வாகீசர் செய்த நூல்.
14. தமிழில் மொழிபெயர்க்கப்பெற்ற அலங்கார நூல்
15. அன்னம்பட்டர் வடமொழியிற் செய்த அளவை நூல்.
16. சைவசமயத்தைப் பரப்பிய பெரிய தீட்சதர்
17. சீதையின் திருமணத்தில் இராமன் முறித்த வில்
18. சிவனும், சீவனும் வெவ்வேறானவை என்னும் கோட்பாடு.
19. துவைதம் கூறிய மத்துவரின் வேறுபெயர்
20. அகத்தியரிடம் வைத்தியங் கற்றுத்தேர்ந்தவர்

1. சார்வாகம். 2. சாவித்திரி விரதம். 3. சிதம்பர தேசிகர். 4. சித்தாந்த கௌமுதி. 5. சிவதருமோத்தரம். 6. சூத்திரம். 7. செயிற்றியம். 8. சேனாவரையர். 9. சைதன்னியர். 10. சோமசமஸ்தம். 11. சோமாஸ்கந்தம். 12. ஞானவாசிஷ்டம். 13. ஞானாமிர்தம். 14. தண்டியலங்காரம். 15. தர்க்கசங்கிரகம். 16. அப்பைய திட்சதர். 17. திரியம்பகம். 18. துவைதம். 19. ஆனந்ததீர்த்தர். 20. தேரையர்.

★ தலைக்கு அணி பெரியவர்களைப் பணிதலாகும் ★



## வித்தியானந்தம் வாழ்க!

பேராசிரியர் கலாநிதி வித்தியானந்தம் தமிழ் மாணுக்கன். அவர் தமிழ்த் துறையில் புகுந்தபோது, நம்மவர் தமிழை மதிக்கவில்லை. அந்தக்காலத்தில் இவரிடம் ஏதோ இருக்கிறது என்று பேராசிரியர் கணபதிப்பிள்ளை கண்டு, பெரும் பேராசிரியர் விபுலானந்த அடிகளாருக்குச் சொன்ஞர். அடிகளாரும் அறிந்து அணைத்துக் கொண்டார்.

பெரியவர்களின் அடிச்சுவடுகளில் சென்ற இளைஞனைப் பெரியவர்கள் தூக்கிவிட்டார்கள். இயற்கை விவேகமும் விடாமுயற்சியும் கொண்ட இவர், தமிழ்த் துறையில் நன்ருக ஊறித்திளைத்து நாட்டார் வாய்மொழி, நாட்டார் கூத்து முதலியவற்றிலும் ஈடுபட்டுத் தம் மாணுக்கர் பரம்பரையை ஜனரஞ்சகமான இலக்கியப் பாதையில் ஓடி விளையாடப் பழக்கிவிட்டார். தமிழர் சால்பைப் பற்றி நன்கறிந்த பண்பியிவர். நல்ல தொண்டுகள் தமிழ் மணக்கச் செய்துள்ளார்.

நல்ல மாணுக்கராய், நல்ல படிப்பாளியாய், பட்டதாரியாய், விரிவுரையாளராய், பேராசிரியராய், பீடாதிபதியாய், உபவேந்தராய்ப் பணிபுரியும் பெருவாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்ற இவர் தலைமையில் தமிழ் தழைக்கட்டும். இவர் இன்னும் பல்லாண்டுகள் பணிபுரியுமாறு வசதிகள் வலுக்கள் பெற வாழ்த்துகிருேம்.

## பப்பா மரங்கள் வளரட்டும்

முற்றத்தில், வேலியோரத்தில் பப்பா மரங்கள், கட்டாயினமானவை கட்டாயம் இடம்பெறக் காலம் வந்துள்ளது. ஒருவேளை உணவாக உண்டு பசிதீர்த்து உடல் வலுப்பெறப் பப்பாப்பழம் போதுமானது. இன்று பப்பாப்பழத்தைத் தேடித் தெருவோரங்களில் விற்பவரிடம் சென்று நல்ல விலைகொடுத்து வாங்கும் காலம் வந்துள்ளது. நாமே முற்றத்தில் நட்டு உண்டாக்கிப் பயன் பெறலாம். விதைகளை ஊன்றவோ, நாற்றங்காலில் முளை கொள்ளச்செய்யவோ இம்மாதம் மிகப்பொருத்தமானது என்று தமிழ்நாட்டு விவசாய விரிவாக்கப் பணியாளர் வாஞெலியில் முழக்குகிருர்கள். கேட்டிருப்பீர்கள். நினைவு செய்கிருேம். அவ்வளவுந்தான்.

முற்ருெடர்:-

## ஒருவரிப் பழமொழி

21. பெண் பாவம் பொல்லாதது
22. அரிசிக்குத் தக்க விலை
23. கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி
24. இல்லாள் இல்லாத வீடு செல்லாக் காசு
25. தாய் தூற்றினல் ஊர் தூற்றும்
26. தாய்ப் பாசம் தனிப் பாசம்
27. தாயுள்ள மட்டும் சீராட்டு
28. தாயோடு சினையும் சாகும்
29. தாரமும் குருவும் தலைவிதிப்படி
30. மைத்துனன் இருந்தால் மலையேறிப் பிழைக்கலாம்
31. மருமகளும் மாமியாராகும் காலம் வரும்
32. ஈயத்தைக் கண்டு இளிக்குதாம் பித்தளை
33. காமத்துக்குக் கண் இல்லை
34. குணமுள்ள இடத்தில் மனம் உண்டு
35. கோபம் குடியைக் கெடுக்கும்
36. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
37. ஆசை வெட்கம் அறியாது
38. மனச்சாட்சியை விட மறுசாட்சி வேண்டாம்
39. மனமுண்டானுல் இடமுண்டு
40. அகப்பை குறைந்தால் கொழுப்பு அடங்கும்




## மகாத்மா காந்தியடிகள் சிக்கனத்தில் சிக்கனம்

மகாத்மாவாக உருவாகி வந்த காந்தி தொப்பி, ரை, டபிள் பிறெஸ்ற் கோட், காற்சட்டை, பூட்ஸ், சூட்கேஸ் எல்லாவற்றையும் நீக்கிவிட்டுச் சாக்குப் பைக்குள் வேட்டி, துண்டு, போர்வை, நீர்ச் செம்பு கொண்டு பாரத நாட்டைச் சுற்றிப் பார்க்க மூன்ரும் வகுப்பில் ஏறினுர். மூன்றிலும் குறைந்த வண்டியிருந்தால் அதில் ஏறியிருப்பார். வறுத்த கோதுமைக் குறுணலை அவர் வெந்நீரிலிட்டுப் பருகுதல் தேநீர் கோப்பிக்குச் சமமாயிருந்தது. பட்ஞ நகரில் பேராசிரியர் கிருபபளானியும் பட்டப்படிப்பு மாணுக்கர்களும் காந்தியைத் தேடித்திரிந்தபோது, அவரைப் பலமுறை கண்டும், பட்டிக்காடு என்று பாராமுகமாக போயினர். பின் சுக்லா என்பவர் காட்டக் கண்டு வியந்தனர்.

## Sayings of Greatmen

1. He who eats and drinks and does not thank the Lord is a thief.
2. Jealousy and peevishness shortens a man's day
3. A man, is what he thinks about all day long.
4. A man's life is what his thoughts make of it.

★ உண்மை பேசுபவன் தவஞ்செய்யத் தேவையில்லை ★



# பஞ்சதந்திரம்

## மாதர் தினம்

சகல நன்மைகளும் அளிப்பவள் பெண். பெண்ணே மன்மதனின் வெற்றிக்கு முத்திரை. புத்தியில்லாதவர்கள் யாராவது பெண்ணை வெறுத்து, சொர்க்கத்தையும் முத்தியையும் விரும்பிச் செல்வார்களேயானுல், அந்தத் தோஷத்துக்காக மன்மதன் அவர்களை அடித்துவிடுகிருன். சீக்கிரத்திலே சிலர் நிர்வாணமாக்கப்படுகின்றனர். சிலர் தலை மொட்டையடிக்கப்படுகின்றனர். சிலர் காவி வஸ்திரம் அணிவிக்கப்படுகின்றனர். சிலர் சடைதரிக்க வேண்டியவர்களாகின்றனர். சிலர் மண்டையோடுகளை மாலையாக அணியும் காபாலிகர்களாகின்றனர்.

சிறு கதை

## குற்றமும் தண்டனையும்

இந்தியாவில் ஒரு பகுதியை ஜஹாங்கீர் என்னும் மன்னன் ஆண்டு வந்தார். அவர் காலத்தில் இந்தியாவுள் துப்பாக்கியின் உபயோகம் பழக்கமாக வந்தது. பலர் துப்பாக்கியை உபயோகிக்கப் பழகினர்.

ஒரு நாள் அரசனின் மூன் மண்டபத்தில் ஏழைப் பெண் ஒருத்தி ''முறையோ, முறையோ'' என்று கூறி அழுதவாறு சென்ருள். அரசன் அவளை ஆதரவுடன் பார்த்து ''மகளே! என்ன நடந்தது?'' என்று கேட்டார். அதற்கு அவள், ''என் கணவனை யாரோ துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். குண்டு அரண்மனைப் பக்கத்திலிருந்து வந்தது'' என்ருள்.

உடனே அரசன் அரண்மனையில் உள்ளவர்களிடம் விசாரணை நடத்தினர். அதனைக் கவனித்த இராணி ஓடோடியும் சென்று, ''அரசே இன்று காலை நான் துப்பாக்கி சுடப் பழகிக்கொண்டபோது ஒரு குண்டு வெளியே பறந்தது'' என்று தன் குற்றத்தை ஒப்புக்கொண்டாள்.

அதைக்கேட்ட மன்னன் கண்ணீர் வடித்து துயர முற்ற பெண்ணைப் பார்த்து ''மகளே! இதோ இந்தத் துப்பாக்கியால் நீ என்னைச் சுட்டுவிடு. உன்னை விதவையாக்கிய என் மனைவியும் விதவையாகட்டும்'' என்று துப்பாக்கியை நீட்டினர்.

அதைக் கண்டும் கேட்டும் நடுங்கிய பெண் அழுதவாறு ''ஐயனே! நான் உங்களை மன்னித்துவிட்டேன்'' என்ருள். அரசன் அவளைத் தேற்றி, அவள் வாழ்வுக்கு உதவியாகப் பொருள் கொடுத்து அனுப்பிவைத்தார்.



# பண்டிதமணி அவர்களுக்கு இன்னும் பல்லாண்டு! பல்லாண்டு!

முற்றி முறுகி மெலிந்தும் சிந்தனைசக்தி பெரிதுடையாராய் எண்பத்தைந்தைத் தொடுபவரை வாழ்த்தினுல், ''ஏன் இனி உறியில் ஏறியிருந்து ஆடவோ'' என்று நகைச்சுவையாகக் கிண்டல் செய்வார். உறியில் ஏறினும் உயிர்ப்புள்ளவராய் உறுதிப்பொருள் கூறிப் பலரை உய்யும் வழியில் செலுத்துபவர்.


ஆறுமுகநாவலரவர்களின் நேரான ஞான பரம்பரையில், சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரிடம் நன்முகக் கற்று முறுக்கேறிய விவேகம் பெரிது. பதினெட்டாம் வயதில் படிக்கத் தொடங்கி இருபத்திமூன்றும் வயதிற் பெரும் பாண்டித்தியம் பெற்றவரைப் பரீட்சை வேண்டாம் என்று புலவர் அவர்கள் தடுத்து வந்தவர். நூற்றுக் கணக்கான தமிழ்நாட்டுப் பண்டிதர்களின் விடைத்தாள்களை மதிப்பிட்ட குமாரசுவாமிப் புலவரவர்களுக்குத் தம் மாணுக்கனின் மேலதிக மிதமிஞ்சிய பாண்டித்தியம் நன்கு தெரிந்தமையால் தடுத்தார் எனலாம். புலவர் மறைந்தபின் ஆசையதிகரிப்பப் பரீட்சையெடுத்துத் தங் கப்பதக்கத்தையும் தட்டிக்கொண்டார். நாவலர் பரம்பரையினர் சங்கிலி செய்து கொடுத்து வாழ்த்தினர்கள்.

ஏறக்குறைய 1600 ஆசிரியர்களையும் நூற்றுக் கணக்கான பண்டிதர்களையும் உருவாக்கிய பண்டிதமணி அவர்களுக்கு நகைச்சுவை பிறப்பிலமைந்தது. ஒரு சொல்லில் இராமபாணத்தின் வேலையைச் செய்யும் சாமர்த்தியம் இளமையில் இருந்தது. இன்று கனிந்து தேனுய்ப் பாலாய்ப் பாகாய்ப் பேசுவர்.

புயல் எவ்வளவு பயங்கரமாயடிப்பினும், இருள் எவ்வளவு மறைப்பாயிருப்பினும், கடவுள் எம்மைப் பாதுகாப்பவராகவும், எமது கூட்டாளியாகவுமிருக்கும் போது, யாம் ஏன் அல்லது யாருக்கு அஞ்சவேண்டும்?

— மகாத்மா காந்தி

★ துஷ்டனைப் பதவியில் வைத்த முதலாளி சுகம் பெறுன் ★



## முத்தையா செட்டியார்

முற்காலத்தில் பல்லவர், சோழர், பாண்டியர் முதலானவர்கள் செய்துவந்த பணிகளைப் பிற்காலத்தில் கோப் பெருஞ்சிங்கன், ராஜநாராயண சம்புவராயன், கண்டர் சூரியன் சம்புவராயன் முதலான சிற்றரசர்கள் சிறப்புடன் செய்து வந்தார்கள். பின்னர் விஜயநகர மன்னர்கள் செய்துவந்தார்கள். பிற்காலத்தில் பெருவணிகரான நகரத்தார் என்னும் பெயர்படைத்த செட்டிமார் திருமகள் கலைமகள் கடாட்சம் பெற்றுச் சிறந்த முறையில் கன்னியாகுமரி முதல் இமயமலையடிவாரம் வரை பணி புரிந்துள்ளார்கள். மிகவடக்கே நாட்கோட்பவன் என வழங்கும் மனைகள், மாளிகைகள், மடங்கள் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களை நினைவுபடுத்துவனவாம். இலங்கையில் ஒல்லாந்தர் காலத்திலேயே செட்டிமாரின் செல்வாக்குப் பரந்திருந்தது. பயன்பெற்றிருந்தது. அக் காலத்தில் எம்மவருக்கு மூலதனமுதவும் மக்கள் வங்கிகளாக செட்டிமாரின் செல்வமனைகள் விளங்கின. யாழ்ப் பாணத்துப் பெரும் புலவர்களைத் தமிழ்நாட்டுக்கு அழைத்துச் சென்று, தண்டிகை முதலிய விருதுகளோடு, திண்ணைப் பிரசங்கிகளாகவும், திருக்கோயில்களில் சொற்பெருக் காற்றுவோர்களாகவும் பயன்படுத்திப் பெருநிதிக்குவியல் கொடுத்தனர். செட்டிமாரின் பணி கோயிற் பணியாகப் பரவியது.

ராசகெம்பீர நாடாளும் கௌரவம் பெற்றாற்போல் சிறந்து விளங்கிய அண்ணாமலைச்செட்டியார் சிதம்பரத்தையடுத்த திருவேட்களத்தை பள்ளித்தலமாக்கிப் பல்கலைக் கழகமாக்கியவர். பலதுறைகள் சிறப்படையப் பீடங்கள் அமைத்தவர். அவர் பண்ணுக்குப்பண்ணிய பெருந் தொண்டு பேசமுடியாதது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அகலிப்பதற்கு ஆக்க பூர்வமான உபகரிப்பும் பணியும் புரிந்தவர் அருமை மைந்தர் முத்தையா செட்டியார். அவர் ஒருசமயம் தாமே தலைமையேற்று நிர்வாகமும் செய்து சிறப்பித்தவர், சீர் திருத்தியவர். அவரின் சிவப்பணியும் சீவர்கள் பணியும் என்றென்றும் நின்று நிலவி அவர் நினைவை நிலைக்கச் செய்யும்.

அப்பனின் அடிச்சுவட்டில் மைந்தன் பணிசெய்து பத்மபூஷணப் பட்டமும் சேர். எனவழங்கும் நைற் பட்டமும் பெற்றவர். கலாநிதிப்பட்டம் அவரால் பெருமை பெற்றது.

வணிகத்துறை அவரின் பிறப்புரிமை. இலங்கையோடு மிகநெருங்கிய செட்டிநாட்டு நிறுவனம் இருநாடுகளையும் இணைத்து வருவது. அதன் இணைப்பு நாடாவாக நெடுங் காலம் பணிபுரிந்தவர். அதற்கு உயிர்ப்பும் கொடுத்து வந்தவர். அவரின் ஆன்மா ஆடவல்லானின் அம்பலத்தில் அழியாவின்பம் நுகருமாறு பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க அவர் தொண்டு.
வளர்க செட்டிமாரின் பணி.

## சைவசித்தாந்த முதல் கருத்தரங்கம்

தர்மபுரவாதீனமும் பாரதிதாசன் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய உலகளாவிய கருத்தரங்கில் கனேடிய அறிஞர் கொப்பேட்டேயர் பங்குபற்றிக் கன்மம் பற்றிப் பேசினார். லண்டன் சைவத்தமிழ்மணி கி. ஞானசூரியன் இதில் கட்டுரை படித்துச் சிறப்பித்தார். லண்டன் சைவ சித்தாந்த நிறுவனம் எட்வேட் மன்னர் வீதியில் 72ஆம் இலக்க இல்லத்தில் E. 17 என்னும் லண்டன் பிரிவில் அமைந்துள்ளது. லண்டன்மூலம் தமிழ், சைவம், சைவ சித்தாந்தம் நல்லமுறையில் பரவுகின்றன. நாயன்மார் குருபூசைகள், பண்டிகைகள் யாவும் நல்லமுறையில் கொண்டாடப் பெறுகின்றன. என்று மில்க்வைற் தொழிலதிபருக்கு அறிக்கை அனுப்புகிறார்கள்.

## இளாலை ஞானவைரவர் ஆலய பரிபாலன்சபை

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த ஊரிலமைந்த இந்தச் சபையார் மில்க்வைற் தொழிலதிபரின் ஊக்குதல், உபகரிப்பு முதலிய உதவிகள் கொண்டு மிக நல்லமுறையில் சிறுவர் சிறுமியர் மத்தியில் தமிழ் சைவம் பிரகாசிக்கச் செய்கிறார்கள். திருவிழாக்காலங்களில் இவர்கள் செய்த சொற்பொழிவுகள் மாணக்கர் உலகத்தை வெகுவாக உற்சாகப்படுத்தி உயர்த்திவிட்டன. உய்யும் வழிகாட்டி விட்டன. இவர்கள் சேவை வளர்க!

## செயற்கரிய சேவை

யாழ்ப்பாணம் யோகு பசுபதி அவர்களின் மனையில் இன்று வைத்தியத்தொழில் நடத்திவரும் சைவப்பெரியார் கு. சண்முகநாதன் அவர்கள் பதுளையில் பெரும் பணி புரிந்து இங்கே இடம்பெயர்ந்துவந்து எங்கள் மத்தியில் பணிபுரிகிறார். மில்க்வைற் தொழிலதிபரோடு அன்பாகப் பழகும் இனிய சுபாவமுள்ள இரக்க குணசீலர். தொழிலதிபர் வேண்டுகோளுக்கிணங்கித் திருநெல்வேலி சைவச் சிறுவர் சிறுமியர் மத்தியில் பற்சுகாதாரம்பற்றிப் பேசி எல்லோரையும் பரிசோதித்து இலவசமாக உதவிபுரிய முன்வந்துள்ளார். இவரின் பரோபகாரகுணம் இவரின் மூதாதையர் வழிவந்ததாகும்.

★ செல்வத்துக்கு அழகு பரோபகாரஞ் செய்தல் ★

வீணே கழியும் ஒரு நிமிடத்தையேனும் மீட்டு உபயோகிக்க முடியாது. எனினும் இதையறிந்த பின்னும் எவ்வளவு நேரத்தை வீணுக்குகிறேம்.

— மகாத்மா காந்தி

அமோக ஆதரவு
அபிமானிகளுக்கு நன்றி

மில்க்வைற் தொழிலகத்தின்
ஐம்பத்தாறும் ஆண்டனுபவத்தில்
உருவான புதிய தயாரிப்பு




சுப்ப
மில்க்வைற்
சோப்

சுப்ப மில்க்வைற் சோப்புக்கு
நாட்டின் நான்கு திசைகளிலும்
நல்லாதரவு கிடைத்து வருகிறது என்பதை
நன்றியுணர்வோடு தெரிவித்துக்கொள்கிறேம்

சுப்ப மில்க்வைற் மேலுறைகளைக் கொடுத்து இலங்கைப்படம், உலகப்படம் ஆகியவற்றை இனுமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## வடபகுதிச் சாரண இளைஞரின் முன்னேடிப் பணி

யாழ்ப்பாணப் பிரதேசத்துச் சாரணர்கள் நுட்ப புத்தியுடையவர்கள். மில்க்வைற் தொழிலதிபரைச் சுற்றி வளைத்து மரம் நாட்டும் இயக்கத்தைத் துரிதமாகக்கொண்டு நடத்தியவர்கள்.

இன்று அவர்களைப் பின்பற்றித் தென்னிலங்கைச் சாரணர் அரசாங்கத்தின் மரம் நாட்டும் இயக்கத்தைக் கொண்டு நடத்தப்போகிறுர்களாம் என்றுல் எங்கள் சாரணர் முன்னேடிகள், வழிகாட்டிகள், வீரர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அடுத்த மாரியில் மரம் நடுவதற்கு எங்கள் சாரணர் இப்போதே தயார்.



யாழ்ப்பாண வைத்தியசாலை முகப்பில்
யூக்கலிப்ரஸ் சோலை மில்க்வைற் முயற்சி

சிறுவர் பகுதி

### அவிழ்த்துப் பாருங்கள்

1. நாலு காலுண்டு வீச வாலில்லை
2. அறுகையும் சருகையும் அமுதமாக்கும்
3. அம்மா சப்பாணி மகள் இழுப்பாணி
4. இறந்தவன் ஊரெல்லாம் போகிறுன்
5. காய்ந்த கொப்பிலே கறுத்தைப்பூ
6. உயர்ந்த கொப்பிலே உரல்
7. எவரும் ஏருத மரத்திலே இளையதம்பி
8. ஓங்கி உயர்ந்த மரத்தில் ஒரு பிடி இலையில்லை
9. ஒரு பிள்ளை பெற்று உயிரை இழந்தாள்
10. உடம்பு சுருங்குமுன் உள்ளே சுருங்குவான்

1. நாற்காலி 2. பசு 3. அம்மிகுழவி
4. கருவாட்டு 5. குடை 6. பலாக்காய் 7. பேன்
8. கற்றுளை 9. வாழை 10. புளியம்பழம்

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம். 1–6–84.